**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S. 6/2021**

2026=ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Deposition of Witness for** | | | **PW 1** | | |
| பெயர் | ° | முருகன் | தொழில் | ° | விவசாயம் |
| தந்தை பெயர் | ° | கோவிந்தராஜ் | வயது | ° | 53 |
| கிராமம் | ° | சென்னாநந்தல் | | ° | |
| தாலுக்கா | ° | சேத்பட் | | ° | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.02.2026. நேரம் - 1.40**

சாட்சியின் அடையாளம் - ஆதார் அட்டையின் மூலம் அடையாளம் காணப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் மேற்படி கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சாட்சி ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன்.

**ஆவணங்கள்**

1. வாதி மற்றும் பிரதிவாதிகளின் என் வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்ட வம்சா வழி பட்டியல **வா.சா.ஆ.1** ஆகவும்,

2. 07.01.1982 அன்று கோவிந்தராஜ், சுப்பிரமணியிடமிருந்து கிரையம் பெற்ற அசல் கிரைய பத்திரம் **வா.சா.ஆ.2** ஆகவும்**,**

**3. 22.07.1982** அன்று கோவிந்தராஜ், சுப்பிரமணியிடமிருந்து கிரையம் பெற்ற அசல் கிரைய பத்திரம் **வா.சா.ஆ.3** ஆகவும்,

4. 03.09.1986 அன்று கோவிந்தராஜ், சுப்பிரமணியிடமிருந்து கிரையம் பெற்ற அசல் கிரைய பத்திரம் **வா.சா.ஆ.4** ஆகவும்,

5. 11.06.2003 அன்று பச்சையம்மாள் மற்றும் நீலா ஆகியோரிடமிருந்து நான் கிரையம் பெற்ற அசல் கிரைய பத்திரம் **வா.சா.ஆ.5** ஆகவும்,

6. 22.01.2017 தேதியிட்ட என் தந்தையின் இறப்பு சான்று அசல் **வா.சா.ஆ.6** ஆகவும்,

7. 31.10.2003 அன்று 1ம் பிரதிவாதி சிவக்குமார், அபாய் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆகவும்,

8. 06.11.2020 அன்று தாவா சொத்தின் 'ஏ' அட்டவணை சொத்தின் கிணற்றுக்கான சிட்டா **வா.சா.ஆ.8** ஆகவும்,

9.29.12.2020 அன்று தாவா சொத்தின் 'ஏ' அட்டவணை சொத்தின் கிணற்றுக்கான வரைபடம் **வா.சா.ஆ.9** ஆகவும்,

**10.** தாவா சொத்தின் 'ஏ' அட்டவணை சொத்தின் கிணற்றுக்கான மின் கட்டண அட்டை **வா.சா.ஆ.10** ஆகவும்,

**11. 2**6.12.2020 அன்று தாவா சொத்தின் 'பி' அட்டவணை சொத்தின் கிணற்றுக்கான சிட்டா **வா.சா.ஆ.11** ஆகவும்,

12. 30.12.2020 அன்று வாதி காவலர்களுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.12** ஆகவும்,

13. காவலர்கள் மேற்படி அறிவிப்பினை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை (3 எண்ணிக்கை)**வா.சா.ஆ.13** ஆகவும்,

14. பிரதிவாதிகள் வாதிக்கு எதிராக தாக்கல் செய்த முன்னே சரிப்பு (Caveat) மனுக்கள் **வா.சா.ஆ.14** ஆகவும்,

**பிரதிவாதி ஆஜரில்லை. நீதியின் நலன் கருதி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**
**நேரம் - 1.50**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
Arni